# பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறை



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம்: 4.2.1

### பாராளுமன்ற அரசியலமைப்பு

நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைந்துள்ள முறைப்படி அரசியலமைப்பினை மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றன. அவையாவன

1. பாராளுமன்ற அரசியலமைப்பு
2. ஜனாதிபதி அரசியலமைப்பு
3. கலப்புமுறை அரசியலமைப்பு, ஆகும்.

- நிர்வாக அதிகாரங்கள் யாப்பு ரீதியாகப் பிரதமரை தலைவராகக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஓர் ஆட்சிமுறை பாராளுமன்ற அரசியலமைப்பு அல்லது மந்திரி சபை அரசியலமைப்பு என அழைக்கப்படும்
- பாராளுமன்ற ஆட்சிமுறையின் தோற்றத்தினை பிரித்தானியாவிலிருந்து இனங்காண முடிந்துது. 1688 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் ஏற்பட்ட ஆங்கிலப் புரட்சி ஊடாக மன்னனிடமிருந்து மக்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதனூடாகத் தோற்றம் பெற்றதாகும். மன்னனிடமிருந்து பெற்ற அதிகாரம் மக்கள் பிரதிநிதி மூலம் ஆளப்பட்டு வந்த படிமுறை வள்ர்ச்சியே பாராளுமன்ற முறை தோற்றத்திற்கு வழிவகுத்தது.
- பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு பிரித்தானியா, அவுஸ்ரேலியா, பெல்ஜியம், கனடா, ஜப்பான் போன்ற நாடுகளாகும்..
- பாராளமன்ற அரசாங்க முறையில் மக்கள் தமது வாக்குகளின் மூலம் சட்டத்துறையின் உறுப்பினர்கள் தெரிவு செய்வர். பிரதமர் என்று அழைக்கப்படும் பிரதான அரசியல் நிறைவேற்றாளர் சட்டத்துறை உறுப்பினர்களிலிருந்தே நியமிக்கப்படுகின்றார். அரசாங்கத்தின் அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனையின் பேரில் நாம நிர்வாகி நியமிப்பார்.

### பாராளுமன்ற அரசியலமைப்பின் பண்புகள்

1. நாமநிர்வாகம், உண்மை நிர்வாகம் என்ற இரு பகுதிகளைக் கொண்டிருத்தல்
2. அரசின் தலைவர் அரசாங்கத்தின் தலைவரை நியமித்தல்
3. அதிகார அசைவு பற்றிய மூலக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
4. அமைச்சர்கள் பெரும்பாலும் பாராளுமன்றின் உறுப்பினர்களாக இருத்தல்
5. அரசாங்கமானது ஒரு கூட்டுக்குழுவாக இருப்பதோடு அதன் சகல உறுப்பினர்களும் கூட்டுப் பொறுப்புக்கு கீழ்ப்பட்டவர்கள் ஆவார்.
6. சட்டத்துறையின் உறுப்பினர்கள் தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுவதால் ஜனாதிபதி முறையோடு ஒப்பிடும் போது தேசியமட்டத்திலான பிரதிநிதித்துவம் குறைந்து காணப்படும்.

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் , ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பாராளுமன்ற அரசியலமைப்பின் நன்மைகள்

1. சட்டத்துறையும், நிறைவேற்றுத்துறையும் ஒரே தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றன.
2. தலைமைத்துவத் திறமையுடன் கூடிய ஒரு நிறைவேற்றுத்துறை நிலவுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதல்
3. அரசாங்கத்தின் தலைமைத்துவம், அரசின் தலைமைத்துவம் என வெவ்வேறாக நிலவுதல்.
4. கொள்கை ஆக்கமும் அதனோடு தொடர்பான பணிகளும் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளப்படுதல்
5. மக்கள் வகை சொல்லுதல் உயர்மட்டத்தில் காணப்படுதல்
6. பாராளுமன்றில் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை மட்டுமே அரசியல் நிறைவேற்றுத் துறையின் இருப்பு தங்கியிருக்கும். சிலவேளை நம்பிக்கையை இழப்பின் அரசாங்கம் மாற்றமுறுவதற்கான இயளலவு உயர்மட்டத்தில் காணப்படும்.

## பாராளுமன்ற அரசியலமைப்பின் தீமைகள்

1. சட்டத்தறையில் அதிபெரும்பான்மையுடன் ஒரு தனிக்கட்சி அரசாங்கத்தை அமைக்கும் போது பாராளுமன்ற அரசாங்க முறை சர்வாதிகாரம் ஏற்படும்.
2. சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை அதிகாரங்கள் ஒரு நிறுவனத்தில் கேந்திரமயமாதல்.
3. அதிகாரவர்க்கத்தின் அதிகாரம் மேலெழுதல்.
4. தேசிய நலன்கள் கீழ்ப்பட்டு குறுகிய நலன்கள் மேலெழுதல்
5. பெரும்பான்மைக் கட்சியின் அல்லது கூட்டுக்கட்சியின் ஆதிக்கம் இடம்பெறுவதற்கான வாய்ப்பு காணப்படுதல்.
6. நாட்டின் அரசியல் நிதமும் பதட்டத்திற்கு உட்படுதல்.

## வினாக்கள்

1) பாராளுமன்ற அரசியலமைப்பினை கொண்ட நாடுகள் இரண்டு தருக?
2) பாராளுமன்ற அரசியலமைப்பின் நன்மைகள், தீமைகளை ஆராய்க?

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் , ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk